සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Science

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8	விஞ்ஞானம்

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

அறிவுறுத்தல்கள்:
- **பகுதி I இற்கு இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
- **பகுதி II இல் முதலாம் வினா கட்டாயமானதுடன் அதற்கு 16 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களுக்கு விடை தருக. அவற்றுக்கு 11 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.**

01. வெதுப்பக உணவுப் பண்டங்களின் உற்பத்தியின் போது பொதுவாகப் பயன்படுத்தும் நுண்ணங்கியானது,
1. அமீபா 2. பெனிசிலின் 3. மதுவம் 4. பரமேசியம்

02. உடலின் மேற்பரப்பில் புறவன்கூடு காணப்படாதது,
1. ஒக்டோபஸ் 2. மட்டைத்தேள் 3. நத்தை 4. கருந்தேள்

- மூன்றாம் நான்காம் வினாக்கள் மேலுள்ள படங்களை அடிப்படையாகக் கொண்டவை.



03. நிலக்கீழ்த் தண்டை கொண்டவை மாத்திரம்.
1. கரட், மஞ்சள் 2. பீற்றூட், உருளைக் கிழங்கு
3. மஞ்சள், உருளைக்கிழங்கு 4. கரட், பீற்றூட்

04. மேலுள்ள தாவரங்களின் தரைக்குக்கீழான தாவரப் பகுதிகளின் பொதுவான தொழிலானது,
1. தகாத காலநிலையைக் கட்டத்தல் 2. இனப்பெருக்கம்
3. உணவு சேமிப்பு 4. ஒளித்தொகுப்பு

05. கந்தகத் தூளையும், இரும்புத் தூளையும் கலந்து நன்கு வெப்பமாக்கி குளிர விடும்போது உருவாகும் சேர்வையின் நிறமும் பௌதிக நிலையையும் சரியாக குறிப்பிடும் விடையானது,
1. கறுப்பு நிறத் திண்மம் 2. கபில நிறத் திண்மம்
3. நீல நிறத் திரவம் 4. நீலநிற திண்மம்

06. திரவ நிலையில் காணப்படும் அல்லுலோக மூலகம் ஒன்றானது,
1. இரசம் 2. பொசுபரசு 3. நீர் 4. புரோமின்

Past Papers Wiki

07. புல், சேம்பு, உருளைக்கிழங்கு போன்ற தாவரங்களின் இலை நுனி கருகியிருப்பது அவதானிக்கப்பட்டது. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியது,
1. கசிவு
2. பரவல்
3. பிரசாரணம்
4. ஆவியுயிர்ப்பு

08. ஆவியுயிர்ப்புச் செயற்பாட்டைக் குறைப்பதற்குக் காரணமான சூழற்காரணி,
1. அதிக சூரிய வெப்பம்
2. அதிக ஒளி
3. அதிக ஈரப்பதன்
4. அதிக காற்று

09. காந்த வடக்கு அமைந்திருப்பது உண்மை வடக்கிலிருந்து சற்று,
1. வடகிழக்குத் திசை
2. வடமேற்கு திசை
3. வடக்குத் திசையில்
4. தென்மேற்கு திசையில்

10. படத்திலுள்ளது போல் தொகுதியை தயார் செய்து அதன் முதல் வாசிப்புத் திணிவு 48.5 கிராமாக காணப்பட்டது. தொகுதியின் A பகுதியை வெப்பமாக்கிய பின் காணக்கூடிய திணிவானது,
1. 46.8g
2. 48.5g
3. 35.6g
4. 52.6g



11. 

உருவில் காட்டப்பட்ட உடுக்கோலமானது,
1. மிதுனம்
2. பெருநாய்
3. வேட்டைக்காரன்
4. இடபம்

12. குளவி கொட்டிய இடத்திற்கு பூசப்பட வேண்டிய பதார்த்தமானது,
1. எலுமிச்சஞ்சாறு
2. சுண்ணாம்பு
3. அப்பச்சோடா
4. தேங்காய் எண்ணெய்

13. உடற்சமநிலையில் பங்களிப்புச் செய்யும் மைய நரம்புத் தொகுதியின் பகுதியானது,
1. மூளையம்
2. மூளி
3. நீள்வளைய மையவிழையம்
4. முண்ணான்

14. முறையே பற்றீரியா மற்றும் புரட்டோசோவா மூலம் பரவும் நோய்களானது,
1. காசம், லிஸ்மானியா
2. தொழுநோய், தேமல்
3. டெங்கு, போலியோ
4. அமீபா வயிற்றுளைவு, லிஸ்மானியா

15. படத்தில் இறையோதற்று காட்டப்பட்டுள்ளது. அதன் வழுக்கும் செப்பமாக்கி A யிலிருந்து B நோக்கி நகர்த்துவதன் மூலம்,
1. மின்குமிழின் பிரகாசம் குறையும்.
2. மின்குமிழின் பிரகாசம் கூடும்.
3. மின்குமிழின் பிரகாசம் மாறாது.
4. மின்குமிழ் அனைந்து அனைந்து ஒளிரும்.



16. உணவைப் பொதிசெய்வதால் உள்ள பிரதிகூலம் ஒன்று,
1. சுவையூட்டிகளும் நிறமூட்டிகளும் பொதி செய் பதார்த்தங்களுடன் தாக்கம் புரிதல்.
2. வளி, நீர் உட்செல்லாது.
3. களஞ்சியப்படுத்துவது இலகுவானது.
4. நுண்ணங்கித் தொழிற்பாடு குறையும்.

17. மழைவீழ்ச்சிக் கோலம் மாறுபடுவதுடன் தொடர்பான இயற்கைக் காரணியானது,
1. பச்சைவீட்டு வாயுக்கள் வெளிவிடப்படுவது.
2. எல் - நினோ தோற்றப்பாடு.
3. முறையற்ற நிருமாணங்கள்.
4. காடழிப்பு

18. வெள்ளப் பெருக்குத் தொடர்பாக பொய்யான கூற்றானது,
    1. கொழும்பு போன்ற நகரப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளம் திடீர் வெள்ளமாகும்.
    2. வெள்ளத்தால் பல்வேறு தொற்றா நோய்கள் பரவுவதற்கு அதிக வாய்ப்புண்டு.
    3. அனர்த்தப் பொதி ஒன்றை வைத்திருப்பது பாதுகாப்பானது.
    4. வீட்டிலிருந்து வெளியேறும் போது மின் இணைப்பைத் துண்டித்துவிட வேண்டும்.

19. பிரசாரணம் நிகழும் சந்தர்ப்பமானது,
    1. ஒளித்தொகுப்பிற்குத் தேவையான காபனீரொட்சைட்டு இலைக்குள் செல்வது.
    2. ஆவியுயிர்ப்பின் போது நீராவி வெளியேறுவது.
    3. தாவர வேரினுள் நீர் உட்செல்வது.
    4. சுவாச செயற்பாட்டின்போது காபனீரொட்சைட்டு வாயு வளிமண்டலத்திற்கு செல்வது.

20. இறைச்சி உருண்டை (மீட்போல்ஸ், மீன்விரலுறு, சொசேஜஸ்) போன்றன,
    1. நேரடியாக உட்கொள்ளக் கூடியன.
    2. விரைவாக தயார்செய்து உட்கொள்ளக் கூடியன.
    3. நுகர்விற்கு முன் சமைக்க வேண்டும்.
    4. நுகர்விற்கு முன் குளிரேற்றியில் வைக்க வேண்டும்.

பகுதி – II

- **இவ்வினாக்களுக்கு விடை எழுத வேறு தாள்களை பயன்படுத்துக.**
- **முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **ஏனைய ஆறு வினாக்களில் நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01)

A. கீழே உருவில் தாவரங்களில் நிகழும் உயிர்ச் செயற்பாடு ஒன்று காட்டப்பட்டுள்ளது.



i. மேலே உருவில் காட்டப்பட்ட உயிர்ச் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்? (1 புள்ளி)

ii. x, y மற்றும் z என்பவற்றால் குறிப்பிடப்படும் பதார்த்தங்களின் பெயர்களை எழுதுக. (3 புள்ளி)

iii. மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் போது உணவாக உற்பத்தி செய்யப்படும் பிரதான விளைபொருள் எது? (1 புள்ளி)

iv. அவ்வுணவு களஞ்சியப்படுத்தும் இடங்களுக்கு எச் சேர்வை வடிவில் கொண்டு செல்லப்படும்? (1 புள்ளி)

v. இச்செயற்பாடு தவிர்ந்து தாவரங்களில் நிகழும் வேறு உயிர்ச்செயற்பாடு இரண்டு எழுதுக. (2 புள்ளி)

B. 1955 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி நிகழ்ந்த நிகழ்வு ஒன்று பின்வருமாறு விவரிக்கப்பட்டு இருந்தது.

"அன்று காலையில் வழமைபோல் சூரியன் உதித்தது. காலை 8 மணி கடந்து சிறிது நேரத்தில் இருள் சூழத்தொடங்கியது. வானத்தில் முழுமையாக இருள் சூழ்ந்து நட்சத்திரங்கள் தென்படத் தொடங்கின"

i. மேலே விவரிக்கப்பட்ட நிகழ்வு எது? (1 புள்ளி)
ii. இந் நிகழ்வு நடக்கும் நாள் எது? (1 புள்ளி)
iii. இந் நிகழ்வின் போது நடுவில் அமையும் வான்பொருள் எது? (1 புள்ளி)
iv. இந் நிகழ்வு அல்லாத வேறு கிரகணம் ஒன்றை எழுதுக. (1 புள்ளி)

C. பாடசாலை மாணவன் ஒருவருக்கு காலை உணவின் போது தயார் செய்து கொடுத்த பாலை அருந்த மறந்து விட்டான். பாடசாலை முடிந்த பின் வந்து பார்த்த போது பால் திரட்சியடைந்து காணப்பட்டது.
i. மேலே குறிப்பிட்ட நுண்ணங்கி தொழிற்பாடு காரணமாக ஏற்படும் மாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்? (1 புள்ளி)
ii. மேலே குறிப்பிட்ட தொழிற்பாடு அல்லாத நுண்ணங்கிகளால் உணவில் நிகழும் வேறு இரு தொழிற்பாடுகளின் பெயர்களை எழுதுக. (2 புள்ளி)
iii. உணவு ஒன்று பழுதடைந்திருப்பதை அறிந்து கொள்ள நீர் பயன்படுத்தும் அவதானங்கள் இரண்டு எழுதுக. (2 புள்ளி)
(மொத்தம் 16 புள்ளிகள்)

(02)
A. i. கீழே உருவில் சூழலில் காணப்படும் விலங்குகள் சில காட்டப்பட்டுள்ளன. இவ் அங்கிகளை முள்ளந்தண்டுளிகள், முள்ளந்தண்டிலிகள் என வகைப்படுத்துக. (½ x 4 = 2 புள்ளி)



ii. நாகப்பாம்பு அடங்கும் ரெப்டீலியா (நகருயிர்கள்) கூட்டத்தின் இயல்புகள் இரண்டு எழுதுக. (2 புள்ளி)
iii. பாம்பு மற்றும் மீன் என்பவற்றின் உடலின் தோல் எவற்றால் மூடப்பட்டிருக்கும்? (2 புள்ளி)

B. அருகே தாவரமொன்றின் இலையொன்று காட்டப்பட்டுள்ளது.
i. இவ்விலை உரித்தாகும் தாவரக் கூட்டம் எது? (1 புள்ளி)
ii. இங்கு x, y என்பவற்றின் பெயர்களைத் தருக. (2 புள்ளி)
iii. இலையொழுங்கு என்றால் என்ன? (1 புள்ளி)
iv. இலையொழுங்கின் முக்கியத்துவம் யாது? (1 புள்ளி)



(03)
A. தூய நீரின் குறிப்பிட்ட நிலைமாற்றம் ஒன்றை கண்டறிய மேற்கொண்ட பரிசோதனை அருகே காட்டப்பட்டுள்ளது.



i. இப் பரிசோதனை எதனை எடுத்துக்காட்ட செய்யப்பட்டது? (1 புள்ளி)
ii. பரிசோதனை முடிவில் மாறாதிருக்கும் வெப்பமானியின் வாசிப்பு யாது? (1 புள்ளி)
iii. இங்கு வெப்பநிலை அளக்க மதுசார வெப்பமானி பொருத்தமில்லை அது ஏன்? (2 புள்ளி)
iv. தூய நீரைப் பயன்படுத்தவில்லை என்றால் அதனை எவ்வாறு உறுதிபடுத்தலாம்? (2 புள்ளி)

B. இறப்பான் மென்சவ்வுக்கு மேலால் கடதாசி துண்டுகளை இட்டு தட்டும் போது அவை மேலும் கீழுமாக அசைவதைக் காணலாம்.
i. மேலே கூறப்பட்ட அவதானத்திற்கு காரணம் யாது? (1 புள்ளி)
ii. இறப்பான் எவ்வகையான இசைக்கருவி? (1 புள்ளி)
iii. இறப்பான் மென்சவ்வின் இழுவை அளவு கூடிக்குறைவது அதிர்வு மீடிறனை எவ்வாறு பாதிக்கும்? (2 புள்ளி)
iv. இழை அதிர்வால் ஒலியை பிறப்பிக்கும் இசைக்கருவிகளில் அதிர்வு மீடிறன் தங்கியுள்ள காரணி ஒன்றை எழுதுக. (1 புள்ளி)

(04)

A. அருகே சடப்பொருள் ஒன்றின் துணிக்கை ஒழுங்கமைப்பு காட்டப்பட்டுள்ளது.



i. இது சடப்பொருளின் எந்த நிலையைக் காட்டுவதாக இருக்கலாம்? (1 புள்ளி)

ii. அச் சடப்பொருளின் தொடர்ச்சி அற்ற தன்மையைக் காட்ட பொருத்தமான முறையொன்றை எழுதுக. (2 புள்ளி)

iii. இத்துணிக்கை ஒழுங்கமைப்பின் படி அச்சடப்பொருளின் நெருக்கற்தகவு மற்றும் கனவளவு பற்றி யாது கூறலாம்?(2 புள்ளி)

iv. இச் சடப்பொருள் நிலையில் அதிக அமுக்கத்தை ஏற்படுத்தினால் ஏற்படும் நிலை மாற்றம் யாது? (1 புள்ளி)

B. அருகே படத்தில் காந்தத்தின் பயன்பாடு ஒன்று காட்டப்பட்டுள்ளது.



i. இங்கு பயன்படுத்தும் காந்தவகை எது? (1 புள்ளி)

ii. மேலே காட்டப்பட்டது தவிர அக்காந்த வகையின் வேறு பயன்பாடு ஒன்று தருக. (1 புள்ளி)

iii. இவ்வகையான காந்தத்தை உருவாக்க பயன்படும் விசேட உலோகம் எது? (1 புள்ளி)

iv. கீழுள்ள உலோகங்களில் காந்தத்தால் கவரப்படும் உலோகங்கள் இரண்டு எழுதுக. (2 புள்ளி)
பொன், வெள்ளி, பித்தளை, குரோமியம், நிகல், அலுமினியம்.

(05)

A. மனித நைதரசக் கழிவகற்றும் தொகுதியின் பிரதான பகுதியின் படம் அருகே தரப்பட்டுள்ளது.



i. படத்தில் காட்டப்பட்ட A, B, C மற்றும் D பகுதிகளின் பெயர்களைத் தருக. (½ x 4 = 2 புள்ளி)

ii. மேலுள்ள தொகுதி நைதரசக் கழிவுத்தொகுதி என அழைக்கப்படுவது ஏன்? (2 புள்ளி)

iii. மனித சிறுநீரகத்தின் அமைவை எழுதுக. (2 புள்ளி)

iv. சிறுநீரகங்களின் ஆரோக்கியம் பேண பின்பற்றக்கூடிய நற்பழக்கம் ஒன்று தருக. (1 புள்ளி)

B. கீழே மின்னோட்டத்தின் விளைவொன்றை பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று காட்டப்பட்டுள்ளது.

i. இவ் அமைப்பு மின்னோட்டத்தின் எவ் விளைவை காட்டுகின்றது? (1 புள்ளி)

ii. இவ் அமைப்பு தொழிற்படும் போது காணக்கூடிய அவதானம் ஒன்று தருக. (1 புள்ளி)

iii. கீழுள்ள மின்னோட்ட விளைவை பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று தருக. (1 புள்ளி)

iv. இவ்விளைவு தவிர மின்னோட்டத்தின் வேறு விளைவு ஒன்றை எழுதுக. (1 புள்ளி)



(06)

A. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைச் சக்கரம் அருகே படத்தில் காட்டப்பட்டுள்ளது.



i. இவ் வாழ்க்கைச் சக்கரத்தில் A, B, C, D பருவங்களின் பெயர்களை எழுதுக. (2 புள்ளி)

ii. இது எவ்வகையான உருமாற்றம்? (1 புள்ளி)

iii. இவ்வகையான உருமாற்றத்தைக் காட்டும் வேறு விலங்கு ஒன்றைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

iv. கரப்பான் பூச்சியின் வாழ்க்கைச் சக்கரம் மேலுள்ள சக்கரத்திலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது? (2 புள்ளி)

v. வாழ்க்கைச் சக்கரம் தொடர்பாக அறிந்து கொள்வதன் முக்கியத்துவம் இரண்டு எழுதுக. (2 புள்ளி)

B. உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை செயற்கையாக கட்டுப்படுத்தி உணவை நீண்ட காலம் பேணுவது உணவு நற்காப்பு எனப்படும்.

i. பாரம்பரிய உணவு நற்காப்பு முறைகள் இரண்டு தருக. (1 புள்ளி)

ii. உணவு நற்காப்பு பதார்த்தங்கள் என்றால் என்ன? (1 புள்ளி)

iii. அதற்கு உதாரணம் ஒன்று தருக. (1 புள்ளி)

iv. நற்காப்புச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப்பதார்த்தம் ஒன்றின் பெயரை எழுதுக. (1 புள்ளி)

(07)

A. அருகே மின்னல் உருவாகும் முறையை காட்டும் படம் தரப்பட்டுள்ளது.



i. A எனக் காட்டப்பட்ட மின்னல் முறையின் பெயரைத் தருக. (1 புள்ளி)

ii. காட்டப்பட்ட முறைகளில் மனிதனுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் மின்னல் வகை எது? (1 புள்ளி)

iii. மின்னல் தாக்குதலில் இருந்து பாதுகாப்புப் பெற பின்பற்றக்கூடிய வழிமுறைகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

iv. மின்னல் தாக்கிய ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வரை செய்ய வேண்டிய முதலுதவி இரண்டு எழுதுக. (2 புள்ளி)

B. குறித்த பிரதேசம் ஒன்றின் தரையில் பின்வரும் அறிகுறிகள் காணப்படல்.

1. கட்டடங்களில் வெடிப்பு ஏற்படல்.
2. தரை புதைந்திருத்தல்.
3. நீரூற்றுக்கள் வற்றிக்காணப்படல்.
4. சரிவான பகுதிகளில் மரங்கள் சாய்ந்திருத்தல்.

i. இது எவ்வகையான இயற்கை அனர்த்தத்தின் முன் அறிகுறியாகும்? (1 புள்ளி)

ii. இலங்கையில் இந்த இயற்கை அனர்த்தம் பரவலாக ஏற்படும் பிரதேசங்கள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

iii. இவ்வியற்கை அனர்த்த முகாமைத்துவத்தின்போது பின்பற்றக்கூடிய வழிமுறைகள் இரண்டு தருக. (2 புள்ளி)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025 **பாடம்** - விஞ்ஞானம் (Science)

விடைப்பத்திரம் - தரம் - 08

பகுதி – I

1. 3	6. 4	11. 4	16. 1
2. 4	7. 1	12. 1	17. 2
3. 2	8. 3	13. 2	18. 2
4. 3	9. 2	14. 1	19. 1
5. 1	10. 2	15. 2	20. 2

(2 x 20 = 40 புள்ளிகள்)

பகுதி – II

(01)

A)

i. ஒளித்தொகுப்பு 1 புள்ளி

ii. x – காபனீரொட்சைட்டு y – ஒட்சிசன் z – நீர் 3 புள்ளி

iii. குளுக்குகோசு 1 புள்ளி

iv. சுக்குரோசு 1 புள்ளி

v. சுவாசம், ஆவியுயிர்ப்பு 2 புள்ளி

B)

i. சூரிய கிரகணம் 1 புள்ளி

ii. அமாவாசை 1 புள்ளி

iii. சந்திரன் 1 புள்ளி

iv. சந்திர கிரகணம் 1 புள்ளி

C)

i. நொதித்தல் 1 புள்ளி

ii. பாண்டடைதல், அழுகுதல் 2 புள்ளி

iii. துர்மணம், தோற்றம் மாறுபடல் (உ + ம்) பூஞ்சனம் வளர்தல், நிறமாற்றம், திரளுதல் 1 புள்ளி

மொத்தம் 16 புள்ளிகள்

(02)

A)

i. முள்ளந்தண்டுளி :- நாகப்பாம்பு, மீன்
முள்ளந்தண்டிலி :- சிலந்தி, நத்தை ½ x 4 = 2 புள்ளிகள்

ii. • தோல் செதில்களை உடையது. சுரப்பிகள் அற்றது.
• இடப்பெயர்ச்சி அவயவங்கள் காணப்படும். சிலவற்றில் பாதங்கள் மறைந்துள்ளன.
• நுரையீரலால் சுவாசிக்கும். 2 புள்ளி

iii. பாம்பு :- உலர்ந்த செதிலுள்ள தோல்
மீன் :- செதில்களால் மூடப்பட்ட தோல் 2 புள்ளி

B)

i. இருவித்திலைத் தாவரம் 1 புள்ளி

ii. x - இலைக்காம்பு, y - இலை விளிம்பு 2 புள்ளி

iii. இலைகள் தண்டுடன் பொருந்தியுள்ள ஒழுங்கு 1 புள்ளி

iv. ஒளித்தொகுப்பிற்கு அவசியமான ஒளியை உச்ச பெறுவது போன்ற கருத்திற்கு. 1 புள்ளி

மொத்தம் 11 புள்ளிகள்

Past Papers Wiki

(03)

A)

i. தூய நீரின் கொதிநிலை — 1 புள்ளி

ii. 100°C — 1 புள்ளி

iii. அற்கஹோலின் கொதிநிலை 78°C ஆகும். இது நீரின் கொதிநிலையை விட குறைவு. ஆகவே அற்கஹோல் நீர் கொதிக்க முன் கொதித்து ஆவியாதல் வெப்பமானி உடையலாம் என்ற கருத்திற்கு. — 2 புள்ளி

iv. பரிசோதனையின் முடிவில் வெப்பமானி வாசிப்பு 100°C ஐ விட வேறுபடும். — 2 புள்ளி

B)

i. இறப்பான் மென்சவ்வு அதிரும் போது கடதாசி துண்டுகள் அதிரும் போன்ற பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக. — 1 புள்ளி

ii. சவ்வு/ கொட்டற் இசைக்கருவி — 1 புள்ளி

iii. இழிவை கூடும் போது அதிர்வு மீடிறனும் கூடும் என்ற... — 2 புள்ளி

iv. இழைகளின் நீளம், இழுவை — 2 புள்ளி

மொத்தம் 11 புள்ளிகள்

(04)

A)

i. வாயு — 1 புள்ளி

ii. வளியுள்ள வாயுச்சாடிக்கு மேலால் கபில நிற நைதரச ஒட்சைட்டு உள்ள வாயுச் சாடி கவிழ்த்தி வைக்கும் போது கபில நிறம் பரவுவதை அவதானிக்கலாம். போன்ற பொருத்தமான செயற்பாட்டிற்கு புள்ளி வழங்குக. — 2 புள்ளி

iii. துணிக்கைகளுக்கிடையில் இடைவெளி உள்ளதால் நெருக்க முடியும்.
கனவளவு குறையும். — 2 புள்ளி

iv. திரவ நிலையை அடையும். — 1 புள்ளி

B)

i. மின் காந்தம் — 1 புள்ளி

ii. மின் விசிறி, மின்மோட்டார், மின்மனி... — 1 புள்ளி

iii. இரும்பு/ மெல்லிரும்பு — 1 புள்ளி

iv. குரோமியம், நிகல் — 2 புள்ளி

மொத்தம் 11 புள்ளிகள்

(05)

A)

i. A – சிறுநீரகம்
B – சிறுநீர் கான்
C – சிறுநீர்ப்பை
D – சிறுநீர்வழி — ½ x 4 = 2 புள்ளிகள்

ii. மனித உடலில் நிகழும் உயிர் இரசாயன செயற்பாட்டின் போது உருவாகும் நைதரசக் கழிவை உடலில் அகற்றுவதால். — 2 புள்ளி

iii. வயிற்றரையில் முதுகுப்புறமாக முள்ளந்தண்டின் இருபக்கங்களிலும் என்ற கருத்திற்கு. — 2 புள்ளி

iv. போதியளவு (தூய) நீர் அருந்தல், அதிக உப்பு பாவனையை தவிர்த்தல், வைத்திய ஆலோசனை இன்றி மருந்து பாவனையை தவிர்த்தல். — 1 புள்ளி

PAST PAPERS WIKI

B)

i. மின்னின் இரசாயன விளைவு — 1 புள்ளி

ii. காபன் கோல்களுக்கு அண்மையில் வாயுக் குமிழி வெளியேறுவது — 1 புள்ளி

iii. மின் முலாமிடல் — 1 புள்ளி

iv. வெப்ப விளைவு, ஒளி விளைவு, காந்த விளைவு — 1 புள்ளி

மொத்தம் 11 புள்ளிகள்

අ.පො.ස [illegible] පුශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් පත්‍ර/[illegible] Past Papers Wiki [illegible] පිවිසෙන්න

(06)

A)

i. A – முட்டை
B – குடம்பி
C – கூட்டுப்புழு
D – நிறையுடலி — 2 புள்ளி

ii. பூரண/ நிறையுருமாற்றம் — 1 புள்ளி

iii. நுளம்பு/ பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக. — 1 புள்ளி

iv. கரப்பான் பூச்சி தனது வாழ்க்கை வட்டத்தில் தெளிவாக உருவ வேறுபாடில்லாத குறையுருமாற்றம் என்ற விடைக்கு புள்ளி வழங்குக. — 1 புள்ளி

v. பீடைக் கட்டுப்பாட்டிற்கு மனித தொற்று நோய் காவி கட்டுப்பாட்டிற்கு, உயிர் பல்வகைமை பாதுகாக்க — 2 புள்ளி

B)

i. உப்பிடல்/ புகையூட்டல்/ தேனில் அமிழ்த்தி வைத்தல்/ உலர் மணலில் புதைத்தல்/ உலர்த்தல் — 1 புள்ளி

ii. உணவுப் பதார்த்தங்களை நற்காப்புச் செய்வதற்காக பயன்படுத்தும் இரசாயன பதார்த்தங்கள் போன்ற விடைக்கு புள்ளி வழங்குக. — 1 புள்ளி

iii. பெக்ரின், குளுக்கோசு/ சக்கரின்/ சித்தரிக் அமிலம்/ கரடீன்/ சோடியம் மெடாபை சல்பைட்டு/ சோடியம் நைத்திரேற்று...

iv. சோடியம் மெற்ற பை சல்பைட்டு போன்ற... — 1 புள்ளி

மொத்தம் 11 புள்ளிகள்

(07)

A)

i. முகில் மின்னல் — 1 புள்ளி

ii. புவி மின்னல் — 1 புள்ளி

iii.
- திறந்த இடங்களில் நடமாடுவதை தவிர்த்தல்.
- தனிமரத்திற்கு கீழ்/ உயரமான மரத்தின் கீழ் நிற்பதை தவிர்த்தல்.
- திறந்த வாகனங்களில் பயணிப்பதை தவிர்த்தல்.
- நீர் நிலைகள், படகு ஓட்டல், நீர்பரப்புகளில் நடத்தல் போன்றவற்றை தவிர்த்தல்.

2 புள்ளி

iv.
- கைகள், பாதங்களை நன்கு தேய்த்து விடல்.
- சுவாசம் தடைப்பட்டிருப்பின் செயற்கை சுவாசம் வழங்குதல் போன்ற... — 2 புள்ளி

B)

i. மண்சரிவு — 1 புள்ளி

ii. பதுளை, நுவரெலியா, மாத்தளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை — 2 புள்ளி

iii.
- சரிவுத் தலையை வெட்டி விடுதல்.
- ஒரு முறை மண்சரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து மக்களை அப்புறப்படுத்தல்.
- மலை உச்சியில் நீர்த் தேங்கியிருப்பின் வெட்டி விடுதல்.
(போன்ற பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக) — 2 புள்ளி

மொத்தம் 11 புள்ளிகள்

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank